உ No: 7975.

சிவமயம்.

சிதம்பரம்

குருநமச்சிவாயதேவர்

அருளிச்செய்த

நமச்சிவாயமாலை.

கூ-வது பதிப்பு.

இஃது
சென்னை:
ஊ - புஷ்பரதசெட்டி அண்டு
கம்பினியாரால்
கலாரத்நாகரம் என்னும்
தமது அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1889

உ

சிவமயம்.

நமச்சிவாயமாலை.

காப்பு.

மந்திரநமச்சிவாய
மாலைநான்செப்புதற்குக்
கந்தவேடனக்குமூத்த
கணபதிகாப்புத்தானே.

நூல்.

அறைமறையயனுமாலு
மமருமுனிவர்தாமும்
முறைமுறைவணங்கியேத்தும்
முதல்வனேநமச்சிவாய. (க)

ஆதியாய்வேதநான்கா
யடிமுடிதெரியாவண்ணஞ்
சோதியாய்நிறைவாய்நின்ற
நிணைவனேநமச்சிவாய (உ)

இணையடிதேடிக்காணு
வேழுலகளந்தமாயன்
கணையதாவெயின்மூன்றெய்தன்
கடவுளேநமச்சிவாய.

ஈட்டியபொருள்போலுன்ற
னிணையடிபணிவார்துன்பம்
வாட்டியசெம்பொன்மேனி
வள்ளலேநமச்சிவாய.

உமையொருபாகம்வைத்த
வும்பர்கடம்பிரானே
அமைதருமணியேமுத்தே
வண்ணலேநமச்சிவாய.

ஊனுமாயுயிருமாகி
யுள்ளுமாய்ப்புறம்புமாகித்
தாணுவாய்ச்சகத்துக்கெல்லாந்
தந்தையாநமச்சிவாய.

எழுபிறப்பதனுன்மாழ்கு
மென்னுயிர்க்கிரங்கிவந்து
பழுதறவாண்டுகொள்ளும்
பரமனேநமச்சிவாய.

டவிழ்கோதைமாத
ரிளமுலைமயக்கப்பட்டு
டுதலொழிக்கவல்ல
நிமலனேநமச்சிவாய. (அ)

யமேற்றுண்டாய்பாத
மன்பிலேன்றலைமேல்வைத்த
சய்யனேவானோர்போற்றுந்
தேவனேநமச்சிவாய. (கூ)

ன்பதுவாயிற்கூட்டி
லொடுங்குயிருய்ய வண்ணம்
பான்பொதிமலர்த்தாள்காட்டும்
புனிதனேநமச்சிவாய. (கO)

மெனுமெழுத்தினுள்ளே
யொளியதாய்விளங்குகின்ற
மனேகருணைநல்கும்
வள்ளலேநமச்சிவாய. (கக)

வியம்பேசாவண்ண
மடிமையைத்தடுத்தாட்கொள்ளுந்
வ்வியமணியேமுத்தே
தேவனேநமச்சிவாய. (கஉ)

அக்கினேப்பூண்டுகொண்டே
யரியவெண்ணீறுபூசும்
சொக்கனேசெக்கர்மேனித்
தூயனேநமச்சிவாய.

கம்பமார்களிறுரித்த
கச்சியேகம்பாசெம்பொன்
அம்பலத்தாடுகின்ற
வண்ணலேநமச்சிவாய.

நகரம்போல்வளைந்துழன்று
நாயினேனுணவுதேடும்
பகரொணாவின்னறீர்க்கும்
பரமனேநமச்சிவாய.

சத்தியுஞ்சிவமுமாகித்
தாணுவாய்ச்சகத்துக்கெல்லா
முத்தியேயளிப்பாயாதி
முதல்வனேநமச்சிவாய.

ஞமனுடனிந்திரற்கு
நாரணற்காரணற்கும்
சமனுறமுதலாய்நின்ற
தாணுவேநமச்சிவாய.

ஓடவியகபாலமேந்தி
யேழிரண்டுலகமெல்லாம்
தடவியுங்காணவொண்ணுச்
சங்கராநமச்சிவாய. (கஅ)

இணங்கியகமலப்பொற்று
ளிருவருமேத்திநின்று
வணங்கவம்பலத்துளாடும்
வரனவாநமச்சிவாய. (கசு)

தண்டமிழ்முனிவன்றன்னைச்
சமமுறத்தென்பாலேவும்
அண்டரோடயன்மால்காணு
வரதியேநமச்சிவாய. (உ0)

நஞ்சணிகண்டத்தானே
நதிமதிச்சடையினானே
கொஞ்சுபச்சிளம்பெண்பாகங்
கொண்டவாநமச்சிவாய. (உக)

அண்டுலகளந்தமாலும்
பங்கயத்தயனுந்தேடிக்
கொண்டுசென்றறியவொண்ணுக்
குரவனேநமச்சிவாய. (உஉ)

மங்கையோர்பாகம்வைத்து
வளர்பிறைமுடிமேல்வைத்து
செங்கையின்மழுமான்வைத்த
தேவனேநமச்சிவாய. (உ

இயக்கருமுனிவர்தாமு
மிருகரங்குவித்துநின்று
வியக்கவம்பலத்திலாடும்
விமலனேநமச்சிவாய. (உ

அரகரசிவனேயென்று
மம்பலத்தாடியென்றும்
பரவுவார்துயரந்தீர்க்கும்
பரமனேநமச்சிவாய. (உ

இலவிதழ்மடவார்தங்க
ளேவலுக்குரியனாகி
அலமருமென்னையாண்ட
வமலனேநமச்சிவாய. (உ

வளமுறுமங்கைதன்னை
மற்றிடப்பாகம்வைத்தே
ஒளிமதிக்கீற்றைச்சூடு
மொருவனேநமச்சிவாய. (உ

அழகியமுருகனுக்கோ
ராறுமாமுகமுங்கூர்மை
பழகியவேலுமீந்த
பரமனேநமச்சிவாய. (உஅ)

இளமையுமூப்புமில்லா
விறைவனேயெம்பிரானே
வளமையாங்கருணேமோன
வள்ளலேநமச்சிவாய. (உகூ)

அறவனேபாதந்தேடி
யன்றிருவோருங்காணு
இறைவனேயென்னைக்காக்கு
மீசனேநமச்சிவாய. (௩0)

அனந்தலினின்றருள்போற்றி
யருச்சிக்குமடியார்தங்கள்
இனந்தனிலென்னைவைப்பா
யீசனேநமச்சிவாய. (௩க)

கரியுரியதனைப்போர்த்துக்
கபாலமுங்கையிலேந்தித்
திரிபுரதகனஞ்செய்த
தேவனேநமச்சிவாய. (௩உ)

காலனையுதைத்தகாலா
காமனையெரித்தகண்ணா
பாலனைக்கறியதாக்கும்
பரமனேநமச்சிவாய. (௰௩

கிளிமொழியமுதச்செவ்வாய்க்
கெவுரியைப்பாகம்வைத்த
ஒளிமதிச்சடையினானே
யொருவனேநமச்சிவாய. (௰௪

கீண்டுவெற்பெடுத்தவீரக்
கேடிலாவரக்கன்றன்னை
மாண்டுகவிரலாலூன்றும்
வள்ளலேநமச்சிவாய. (௰௫

குழைகுமிழடருங்கண்ணாள்
கோதையைப்பிரிந்தபோது
பிழைசெயுமதனைக்காய்ந்த
பிஞ்ஞகாநமச்சிவாய. (௰௬

கூவிளமறுகுதும்பை
கொன்றைவெள்ளெருக்கூமத்தை
மேவியசடையினானே
வித்தகாநமச்சிவாய. (௰௭

கங்கையைச்சடைமேல்வைத்துக்
கௌரியைப்பாகம்வைத்தல்
அங்கணாநீதியோசொ
லையனேநமச்சிவாய. (௩௮)

கேசவன்வணங்கிக்கண்ணுங்
கேழ்கிளர்கஞ்சஞ்சூட்ட
ஆசியோடாழியீந்த
வமலனேநமச்சிவாய. (௩௯)

கைச்சிலைமேருவாகக்
கரியமால்பகழியாக
உச்சிதப்புவித்தேரேறு
மொருவனேநமச்சிவாய. (௪௦)

கொற்றவன்றனக்குமுன்னே
குதிரையிலேறிக்காட்டிப்
பொற்றுகில்கோலாற்கொள்ளும்
பூரணாநமச்சிவாய. (௪௧)

கோணமாமலையில்வாழுங்
கோதிலாவாதியேநீ
ஆணல்லைபெண்ணுமல்லை
யத்தனேநமச்சிவாய. (௪௨)

சந்திரன்விளங்குஞ்சென்னித்
தலைவனேதம்பிரானே
இந்திரனிமையோர்போற்று
மிறைவனேநமச்சிவாய.

சாந்தணிமுலையாடன்னைத்
தண்புனலெனப்பேர்மாற்றி
ஏந்துசெஞ்சடையெம்மானே
யிறைவனேநமச்சிவாய.

சிரமதுகையிலேந்திச்
சீரியமுனிவர்தங்கள்
விரகினையழித்தமேரு
வில்லியேநமச்சிவாய.

சீதளகமலவாவித்
திருநாவலூரன்றன்னைச்
சாதனங்காட்டியாண்ட
தாணுவேநமச்சிவாய.

சுத்தவெண்ணீறுபூசிச்
சுடலையினடனமாடும்
அத்தனேயாரூர்வாழு
மண்ணலேநமச்சிவாய.

சூரியன் றுயரந்தீர்த்தாய்
தோன்றிமுப்புரத்தைச்சுட்டாய்
ஆரியவெள்ளிவெற்பி
னத்தனேநமச்சிவாய. (சஅ)

செஞ்சிலைகையிலேந்திச்
சிரித்துமுப்புரமெரித்தாய்
தஞ்சமென்றுனையடைந்தேன்
றுணுவேநமச்சிவாய. (சகூ)

சேதனவடியாரோடு
திருப்பெருந்துறையில்வந்து
வாதவூரரையாண்ட
வரதனேநமச்சிவாய. (ருo)

சைவனேயைம்புலங்க
டமைமனஞ்சாராவண்ணம்
கைவரவருளவேண்டுங்
கடவுளேநமச்சிவாய. (ருக)

சொரிமலர்க்கொன்றைதும்பை
சொல்லியவறுகுதாளி
விரிமலர்ச்சடையாய்வெள்ளி
வெற்பனேநமச்சிவாய. (ருஉ)

சோலைசூழாலவாயிற்
சோதியேசமணைமாய்க்கப்
பாலருவாயினார்க்காப்
பரிந்தருணமச்சிவாய. (ருக

தந்தையுந்தாயுமில்லாத்
தாணுவேயாண்பெண்ணல்லாய்
இந்திரனயன்மால்போற்று
மிறைவனேநமச்சிவாய. (ருச

தாதவிழ்கொன்றைதும்பை
சங்கொடுதலையுங்கொண்ட
நாதனேவேதமோது
நம்பனேநமச்சிவாய. (ருரு

திரிபுரமெரித்தமூர்த்தி
தென்னவன்முன்னேமுன்னாள்
நரிதனைப்பரியதாக்கு
நம்பனேநமச்சிவாய. (ருசா

தீதிலாவாதவூரர்
செய்கைகண்டுளமகிழ்ந்த
நாதனேபரனேவானோர்
நண்பனேநமச்சிவாய. (ருஎ

துணைவனேயன்பர்தங்க
டுன்பறுத்தருளுமூர்த்தி
பணைமுலையுமையாள்பங்கா
பரமனேநமச்சிவாய. (௫௮)

தூதுசுந்தரற்காச்சென்ற
சோலைசூழாரூரையா
ஆதியேயரனேவெள்ளி
யசலனேநமச்சிவாய. (௫௯)

தென்னவனாகக்கூடற்
சேர்ந்துசெங்கோல்செலுத்தி
அந்நகர்தன்னையாண்ட
வமலனேநமச்சிவாய. (௬0)

தேடியேயிருவர்காணாத்
திருவடிமனதுள்யாரும்
நாடியேவணங்கநின்ற
நம்பனேநமச்சிவாய. (௬௧)

தையலோர்பாகம்வைத்துச்
சடையிலேகங்கைவைத்த
ஐயனேயாரூர்வாழு
மண்ணலேநமச்சிவாய. (௬௨)

தொல்லுலகெல்லாம்போற்றுஞ்
சோதியேசூலபாணி
வில்லெனமேருவாங்கும்
வித்தகாநமச்சிவாய. (சா

தோத்திரஞ்செய்மாயற்குச்
சுடரொளியாழியீந்த
ஆத்தனேயடியரன்பிற்
களியனேநமச்சிவாய. (சா

நஞ்சினையருந்திமாய
னான்முகன்முதலோர்நாண
அஞ்செழுத்துருவமான
வத்தனேநமச்சிவாய. (சா

நாரணனலரோனிந்த்ரன்
நாடிமுன்வணங்கிநின்றே
ஆரணமோதுகின்ற
வாதியேநமச்சிவாய. (சா

நிற்பவர்நெறியைநோக்கி
நெஞ்சைவிட்டகலாதானே
கற்பனைகடந்தசோதிக்
கடவுளேநமச்சிவாய. (சா

நீறணிமேனியானே
நிமலனேயமரர்கோனே
ஆறணிசடையினானே
யண்ணலேநமச்சிவாய. (௬௮)

நுண்ணிடைமாதுபாகா
நோக்குவார்தம்மைநோக்குங்
கண்ணுதற்பரனேதேவா
கடவுளேநமச்சிவாய. (௬௯)

நூபுரபதமாதோடு
நுவலருஞ்சபையிலாடும்
மாபுரத்தவர்கள்காலா
வானவாநமச்சிவாய. (௭0)

நெஞ்சகமலரினுன்னை
நினைவறநினைந்தபேருக்
கஞ்சலென்றருளிச்செய்யு
மண்ணலேநமச்சிவாய. (௭௧)

நேத்திரந்தன்னால்வேளை
நெருப்பெழச்சுட்டுவிட்டாய்
நேத்திரமுனிவோர்போற்றுந்
தாணுவேநமச்சிவாய. (௭௨)

நைந்துனைநினைப்பார்பாவ
நாசமதாக்கிநிற்பாய்
பைந்தொடிபாகங்கொண்ட
பரமனேநமச்சிவாய. (எ

நொந்தவரிளைத்தோர்தம்மை
நொடியளவினில்வாழ்விக்கும்
கந்தரங்கறுத்தமூர்த்தி
கடவுளேநமச்சிவாய. (எ

நோக்கமூன்றுடையாயென்னை
நோக்கியேதுரியாதீதத்
தூக்கத்தில்வைப்பதென்றோ
சொல்லுவைநமச்சிவாய. (எ

நவ்வியையேந்துங்கையாய்
நயமுடனடியார்தங்கள்
வெவ்வினையெல்லாந்தீர்க்கும்
விமலனேநமச்சிவாய. (எ

பத்தராய்ப்பணிவார்தம்மைப்
பதங்கொடுத்தாளுமையா
சத்தனேவேதஞ்சொன்ன
துணைவனேநமச்சிவாய. (எ

பாடுவார்மூவர் தம்மைப்
 பதங்கொடுத்தாண்டமூர்த்தி
தேடுவார்தேடுகின்ற
 செம்பொனேநமச்சிவாய. (எஅ)

பிறையணிசடையினானே
 பிஞ்சகாவடியார்க்கெல்லாங்
குறைவறவாழ்வளிக்குங்
 கொற்றவாநமச்சிவாய. (எகூ)

நீறிடப்பூசிப்பார்தம்
 பெருவினையறுக்குமூர்த்தி
ஆடல்சேரெருதிலேறு
 மண்ணலேநமச்சிவாய. (அ0)

புகலுறுங்கல்லாலன்பு
 பூண்டெறிசாக்கியர்க்குத்
தகவுறமுத்திநல்குந்
 தாணுவேநமச்சிவாய. (அக)

பூசுவெண்ணீறுபொங்கப்
 பொருவிலாவம்மைகாண
நேசமோடாலங்காட்டில்
 நிருத்தஞ்செய்நமச்சிவாய (அ௨)

பெண்ணமுதனையார்நாணும்
பெட்புறுவளையுந்தூசும்
எண்ணுறுபலியாக்கொண்ட
விறைவனேநமச்சிவாய. (அ௩

பேயுடன்காட்டிலாடும்
பிஞ்சகாபெரியோர்தங்கள்
தூயநன்மனத்துளானே
சுத்தனேநமச்சிவாய. (அ௪

பையரவணையிற்றங்கு
பாரளந்தோற்குப்பாதி
மெய்யளித்தருள்கூர்ந்திட்ட
விண்ணவாநமச்சிவாய. (அ௫

பொசியுறுதேம்பூஞ்சோலைப்
புகலியிற்பிள்ளையார்க்குச்
சசியொளிமுத்தின்பந்தல்
தந்தவாநமச்சிவாய. (அ௬

போதகமாகிவந்த
புன்மைசேரசுரன்றன்னை
னோதகவிரித்துப்போர்த்த
நுண்ணியாநமச்சிவாய. (அ௭

பௌவத்திற்சிலையொடாழும்
படியமண்செய்யவப்பர்க்
கெவ்வமதகற்றிப்பேற
தீந்தவாநமச்சிவாய. (அஅ)

மறுவறுமாதிசைவ
மரபிற்சுந்தரற்குத்தூதாய்ச்
செறிநிசிபரவைவாயிற்
சென்றவாநமச்சிவாய. (அசு)

மான்மழுக்கையிலேந்தி
வன்னியோர்பாகம்வைத்தே
ஆன்முதுகேறுஞ்சோதி
யையனேநமச்சிவாய. (சுo)

மிடற்றினிற்காளகூட
விடத்தினைக்கறுக்கவைத்தாய்
நடத்தினில்விருப்பம்வைத்தாய்
நம்பனேநமச்சிவாய. (சுக)

மீனெனவந்தமாயன்
விழியினையிடந்துசாத்தி
ஆனதோர்மேனிநல்கு
மண்ணலேநமச்சிவாய. (சுஉ)

முன்னமேபிரமன்றன்னை
முனிந்ததோர்தலையறுத்தாய்
என்னைவந்தாண்டுகொள்வா
யீசனேநமச்சிவாய (கூ

மூர்க்கனுந்தக்கன்வேள்வி
முன்புசென்றழித்துவெற்றி
மார்க்கங்கண்டிட்டசோதி
வானவாநமச்சிவாய. (கூ

மெலிவிலாத்தவத்தோர்கோப
மேலுறமுன்னாள்விட்ட
புலிதனையுரித்துச்சாத்தும்
புண்ணியாநமச்சிவாய. (கூ

மேயபேருணர்விற்கெட்டா
வெளியதாயணுவுமாகி
ஆயசிற்சொரூபமான
வண்ணலேநமச்சிவாய. (கூ

மையுறுகுழலாள்கூடல்
மங்கையர்க்கரசியார்முன்
செய்குறும்பணிக்குவந்த
தேவனேநமச்சிவாய. (கூ

மொழிதருநால்வர் தங்கள்
முதுமறைத்தமிழ்ப்பாமாலை
ஒழிவின்றிச்சூடிக்கொள்ளு
மொருவனேநமச்சிவாய. (கூஅ)

மோகினிவடிவங்கொண்ட
முகில்வண்ணன்றன்னைச்சேர்ந்து
சோகமிலையனாரைத்
தோற்றியோய்நமச்சிவாய. (கூகூ)

மௌவலங்குழலார்மோக
வலையற்றுத்துயர்சித்தாந்தச்
செவ்வையாமுத்தியென்றுஞ்
சித்திக்குமநமச்சிவாய, (க00)

நமச்சிவாயமாலை.

முற்றிற்று.
